# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 73/ந/2025, நாள் 19.08.2025**

திரு. S. முருகன்,
சிவகங்கை, சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி, சிவகங்கை மாவட்டம். – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, மணிமேகலை தெரு, எண்.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. முருகன் என்பவரது 05.02.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.02.2025 அன்று பெறப்பட்டு, 73/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, மணிமேகலை தெரு, எண்.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.முருகன் என்பவரின் 05.02.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

“சிவகங்கை நகராட்சியில் கடந்த 2018–ம் ஆண்டு பொதுநிதியில் நகராட்சிக்குட்பட்ட சொந்தமான (6) ஆறு இடங்களில் பார்க் உள்பட அனைத்து இடங்களிலும் முள்வேலி அமைக்கும் பணிக்கு உத்தரவு பெற்று வேலை முடித்து இறுதிப்பட்டியல் 2018–ஆம் ஆண்டு பெற்றுவிட்டேன். எனவே, எனது பில்லில் பிடித்தம் செய்த SDF-SD தொகையை திரும்ப வழங்குமாறு நகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடந்த 26.10.2022–ம் ஆண்டு முதல் எனது பிடித்த தொகையை திரும்ப வழங்க வேண்டும் என்று மனு செய்து கேட்டும் மற்றும் பொதுத்தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் மனு செய்து இதுநாள்வரை கேட்டு வருகிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரது புகார் குறித்து சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 13.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படாத நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் ஆகியோரை 09.07.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் 09.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு, தனது அறிக்கையினை 08.07.2025 நாளிட்ட கடித ந.க.எண்.2353/2025/இ3–ல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்தார். அதில் –

“சிவகங்கை நகராட்சியில் 2023–2024 ஆண்டு வரை தணிக்கை முடிவுற்று தணிக்கை குறிப்பு பெறப்பட்டுள்ளது. திரு. S. முருகன் அவர்கள் சிவகங்கை நகராட்சி பொறியியல் பிரிவில் ஒப்பந்ததாரராக

பணி செய்த காலங்களில் தனியர் பெயரில் உள்ள வைப்பு தொகை கீழ்க்காணும் விவரங்களின்படி காசோலை மூலம் திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

2023–2024–ம் ஆண்டில் திரு. S. முருகன், ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட வைப்புத்தொகை விவரங்கள் கீழ்க்கண்டவாறு

| வ.எண். | வருடம் | தொகை (ரூ) | செலவு பட்டியல் எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2013–2014 | 1600 | 19/2023–2024 11.04.2023 |
| 2 | 2013–2014 | 3200 | 19/2023–2024 11.04.2023 |
| 3 | 2013–2014 | 150 | 19/2023–2024 11.04.2023 |
| 4 | 2013–2014 | 280 | 19/2023–2024 11.04.2023 |
| 5 | 2014–2015 | 220 | 19/2023–2024 11.04.2023 |
| 6 | 2014–2015 | 250 | 19/2023–2024 11.04.2023 |
| 7 | 2014–2015 | 260 | 19/2023–2024 11.04.2023 |
| 8 | 2014–2015 | 500 | 19/2023–2024 11.04.2023 |
| 9 | 2018–2019 | 3734 | 19/2023–2024 11.04.2023 |
| 10 | 2018–2019 | 17708 | 19/2023–2024 11.04.2023 |
| மொத்தம் | | 27902 | |

ஒப்பந்ததாரர் திரு. S. முருகன் தனது புகார் மனுவில் திரும்ப வழங்க வேண்டிய வைப்புத் தொகை பற்றிய விவரம் எதுவும் குறிப்பிடவில்லை. சிவகங்கை நகராட்சியில் உள்ள வைப்புத்தொகை பதிவேட்டில் தனியரது பெயரில் உள்ள வைப்புத்தொகை கீழ்க்காணும் காசோலைகள் மூலம் ஒப்பந்ததாரரான திரு. S. முருகன் அவர்களுக்கு திரும்ப வழங்க காசோலை தயார் நிலையில் உள்ளது.

| வ. எண். | வருடம் | தொகை (ரூ) | காசோலை எண் மற்றும் நாள் | வங்கியின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2015–2016 | 3500 | 522640 07.07.2025 | பாரத மாநில வங்கி சிவகங்கை |
| 2 | 2018–2019 | 963 | | |
| 3 | 2018–2019 | 6000 | | |
| 4 | 2021–2022 | 2300 | | |
| மொத்தம் | | 12763 | | |

5. மனுதாரர் திரு. S. முருகன் என்பவர் 09.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்தார்:-

"சிவகங்கை நகராட்சியில் கடந்த 2018ம் ஆண்டு நகராட்சிக்கு உட்பட்ட (1) வார்டு எண்.4, சொசைட்டி லேஅவுட் (2) வார்டு எண்.19, K.P.K. நகர் (3) வார்டு எண்.19, சாஸ்திரி தெரு (4) வார்டு எண்.20, பாரதி பார்க் (5) வார்டு எண்.26, அகிலாண்டபுரம் மற்றும் (6) இந்திரா நகர் ஆகிய 6

இடங்களில் பார்க் முள்வேலி அமைக்கும் பணி சிவகங்கை நகராட்சியால் வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்றநிலையில், எனது பில்லில் பிடித்தம் செய்த EMD - FSD தொகையினை திரும்ப வழங்க சிவகங்கை நகராட்சி ஆணையரைக் கேட்டுக்கொண்டும், இதுநாள் வரை மேற்படி தொகை எனக்கு கிடைக்கப் பெறாததால், இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தேன். எனது பில்லில் பிடித்தம் செய்த EMD மற்றும் FSD தொகை ரூ.12,763/– க்கான காசோலையினை இன்று (09.07.2025) சிவகங்கை நகராட்சி ஆணையரிடமிருந்து பெற்றுக்கொண்டேன் என்று மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் 09.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்தார் :-

மனுதாரர் திரு. S. முருகன் என்பவர் சிவகங்கை நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்ததாரராக பணி செய்த காலங்களில் தனியர் பெயரில் உள்ள வைப்பு தொகை ரூ.27,902/– காசோலையாக 2023–2024ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்ததாரர் திரு. S.முருகன் தனது புகார் மனுவில் திரும்ப வழங்க வேண்டிய வைப்புத் தொகை பற்றிய விவரம் எதுவும் குறிப்பிடவில்லை. இந்நகராட்சியில் உள்ள வைப்புத்தொகை பதிவேட்டில் உள்ள விவரப்படி தனியரது பெயரில் உள்ள வைப்புத்தொகை கீழ்க்கண்டவாறு திரும்ப வழங்கப்பட வேண்டியுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டின் வைப்புத்தொகை – ரூ.3500/–
2018–2019 ஆம் ஆண்டின் வைப்புத்தொகை – ரூ.963/– மற்றும் ரூ.6000/
2021–2022 ஆம் ஆண்டின் வைப்புத்தொகை – ரூ.2300/–

ஆகமொத்தம் ரூ.12763/–க்கான காசோலை பாரத ஸ்டேட் வங்கி, சிவகங்கையின் காசோலை எண்.522640 நாள் 07.07.2025 இன்று (09.07.2025) மனுதாரரான திரு. S. முருகன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

சிவகங்கை நகராட்சியில் கடந்த 2018ம் ஆண்டு நகராட்சிக்கு உட்பட்ட (1) வார்டு எண்.4, சொசைட்டி லேஅவுட் (2) வார்டு எண்.19, K.P.K. நகர்(3) வார்டு எண்.19, சாஸ்திரி தெரு (4) வார்டு எண்.20, பாரதி பார்க் (5) வார்டு எண்.26, அகிலாண்டபுரம் மற்றும் (6) இந்திரா நகர் ஆகிய 6 இடங்களில் பார்க், முள்வேலி அமைக்கும் பணி முடித்து இறுதிப்பட்டியலுக்கான தொகை 2018–ஆம் ஆண்டே பெற்றுக்கொண்டதாகவும், பில்லில் பிடித்தம் செய்யப்பட்டு வழங்கப்படாமல் உள்ள SDF-SD தொகை திரும்ப வழங்க மனுதாரர் தனது புகார் மனுவில் கோரியுள்ள விவரம் தெரியவருகிறது.

மனுதாரர் தனது புகார் மனுவில் திரும்ப வழங்க வேண்டிய வைப்புத் தொகை பற்றிய விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்பதும், சிவகங்கை நகராட்சியில் உள்ள வைப்புத்தொகை பதிவேட்டில் உள்ள விவரப்படி தனியரது பெயரில் ரூ.12763/– வைப்புத்தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது என்பதும், அதற்கான காசோலை பாரத ஸ்டேட் வங்கி, சிவகங்கையின் காசோலை எண்.522640 நாள் 07.07.2025–ஐ இன்று (09.07.2025) மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள விவரம் ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக தெரியவருகிறது.

எனவே, மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய SDF-SD தொகை ரூ.12763/– காசோலை பாரத ஸ்டேட் வங்கி, சிவகங்கையின் காசோலை எண்.522640 நாள் 07.07.2025 மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதால், இப்பொருள் மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 19–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S.முருகன்,
த/பெ. K. சுந்தரம்,
23, மணிமேகலை தெரு,
சிவகங்கை – 630 561,
சிவகங்கை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

21/8/25

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032